தொழில் வழிகாட்டி அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் பார்வையற்றோர் இருவரும், கை, கால் ஊனமுற்றோர் இருவரும் நியமனம் செய்யப்படுவர். இந்த அலுவலர்கள், ஊனமுற்றோர், ஊனமுற்றோரின் பெற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கான தனியார் சமூகச் சேவை நிறுவனங்கள் ஆகியோருக்கு, ஆலோசனைகளும், வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டுதல்களும் வழங்குவார்கள். இப்பதவிகள், ரூ. 5,000–150–8,000 என்ற சம்பள விகிதத்தைக் கொண்ட நுழைவு நிலைப் பதவிகளாக இருக்கும்.

முற்பகல் 11–55

பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நலனைக் கருத்தில் கொண்டு, இன்று நான் அறிவித்துள்ள இச்சலுகைகளும் உதவிகளும், ஊனமுற்றோர் புது நம்பிக்கையுடனும் புதுத் தெம்புடனும் தங்களது வாழ்க்கையைத் தொடர வழி வகுக்கும். ஊனமுற்றோர் நலனைக் காக்கும் அரணாக எனது அரசு என்றென்றும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சேலம், வைஸ்யா கல்லூரியில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தில் பாதிப்புற்றோருக்கு நிதியுதவி—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று (15–3–2005) உள் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள், சேலம் வைஸ்யா கல்லூரியில் காவல் துறை நிகழ்த்திய செயல்முறை விளக்கம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது, அந்த நிகழ்வைப் பற்றிய விவரங்களை நான் இந்த அவைக்குத் தெரிவித்தேன்.

பெரியார் பல்கலைக்கழகம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, வைஸ்யா கல்லூரியில் 9–3–2005 முதல் 11–3–2005 வரை மூன்று நாள் பயிற்சி முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. 11–3–2005 அன்று பயிற்சி பெற்ற ஆயுதப்படையினர், மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு உரிய எச்சரிக்கை விடுத்தபின், வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தினை நடத்திக்கொண்டிருக்கையில், இரண்டு Buck shot-கள் வானை நோக்கிச்

சுட்டதில், அதிலிருந்து வெளிவந்த ரவைகள் சுவரின்மேல் பட்டுச் சிதறியதில் தீபலட்சுமி, நிஷா பானு மற்றும் ஆரோக்கிய லிமா ரோஸ் ஆகிய மூன்று கல்லூரி மாணவிகளுக்குக் காயம் ஏற்பட்டது. காயம் அடைந்த மாணவிகள், சேலம் மாவட்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். சேலம் நகரக் காவல் துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர், சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, மருத்துவமனைக்குச் சென்று விசாரித்தனர். காயங்களுக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தீபலட்சுமி 13–3–2005 அன்று இரவு 10–00 மணி அளவில் இறந்தார். வைஸ்யா கல்லூரியின் முதல்வர் அளித்த புகாரின்பேரில், சேலம், அம்மாப்பேட்டை, காவல் நிலைய குற்ற எண் 680/2005–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கையின் நகல், சேலம் வருவாய்க் கோட்டாட்சி அலுவலருக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஆயுதப்படைப் பிரிவைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவரங்களை நேற்று நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்தேன்.

இந்த நிகழ்வில் இறந்த செல்வி தீபலட்சுமியின் குடும்பத்துக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி நிஷா பானு மற்றும் ஆரோக்கிய லிமா ரோஸ் ஆகியோருக்கு தலா 25,000 ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை
(இ) கோரிக்கை எண் 32—சட்டத்துறை
—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசும்பொழுது, ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நீதித் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்தது